பள்ளிக் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

கடிதம் எண்.32697/அகஇ/2015–2, நாள் 24.3.2015.

அனுப்புநர்
திரு.இரா.இராதாகிருஷ்ணன், எம்.ஏ., எம்.பில்.,
அரசு சார்புச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் – 2014–2015ஆம் கல்வியாண்டில் 50 ஊராட்சி ஒன்றிய/ நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர் பணியிடங்களைத் தோற்றுவிக்கப்பட்டது – தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு தொடர் நீட்டிப்பு வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை
1. தங்களது கடித ந.க.எண்.69005 /எல்/இ3/2015, நாள் 10/2015.
2. அரசு கடித எண்.32697/அகஇ/2015–1, நாள் 22.11.15.
3. தங்களது கடித ந.க.எண்.69005 /எல்/இ3/2015, நாள் 4.10.15.

-----

பார்வையில் காணும் கடிதங்களுக்கு தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பார்வை 1ல் காணும் தங்களது கடிதத்தில், அரசாணை (நிலை) எண்.199, பள்ளிக் கல்வி, நாள் 2.12.2014ல் தோற்றுவிக்கப்பட்ட 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்களுக்கு மட்டும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை கோரப்பட்டுள்ளது. ஆனால் இவ்வாணையில் இப்பணியிடங்களுடன் தோற்றுவிக்கப்பட்ட 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் நிலை உயர்த்தப்பட்ட 50 உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் தொடர் நீட்டிப்பு குறித்த விவரங்கள் ஏதும் குறிப்பிடப்படவில்லை. எனவே, பார்வை 2ல் காணும் அரசு கடிதத்தில் பார்வை 1ல் காணும் தொடர் நீட்டிப்பிற்கான கருத்துருவில் இடம் பெற்றுள்ள தவறுகளை களைந்து திருத்திய கருத்துருவினை உடன் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி தங்களை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. பார்வை 3ல் காணும் தங்களது கடிதத்தில் அரசாணை (நிலை) எண்.199, பள்ளிக் கல்வி, நாள் 02.12.2014ல் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களுக்கு 02.03.2016 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை கோரப்பட்டுள்ளது. அதில், தாங்கள் தெரிவித்துள்ளவாறு மேற்காண் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்பிற்கான கருத்துரு கிடைக்கப்பெறவில்லை எனவே, பார்வை 2ல் காணும் அரசு கடிதத்தில் கேட்டுக் கொண்டவாறு மேற்காண் பணியிடங்களுக்கான தொடர் நீட்டிப்புக்குரிய திருத்திய கருத்துருவினை உடன் அரசுக்கு அனுப்பி வைக்கும்படி தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

28/3/16

அரசு சார்புச் செயலாளருக்காக.